Registered as a Newspaper

TOEFL CLASSES
by
S·B·IYAR
சனி / ஞாயிறு
1-30 — 8-00
12, வைமன் வீதி,
நல்லூர்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
விலை: ரூ. 1.25

Spoken English
by
S·B·IYAR
தூர இடங்களிலிருந்து வருபவருக்கு.
ஆரம்பம்: 02-03-1987
நேரம்: 10-30 — 11-30
12, வைமன் வீதி,
நல்லூர்.

மலர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ௵ பங்குனி மீ 5 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1407 றஜப் பிறை 18 (19.03.1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY இதழ்: 96

கூப்பனுக்கு எரிபொருள்

எரிபொருள் காங்கேசனில்

ராணுவமுகாம்களில் கூப்பன்

யாழ்ப்பாணம். மார்ச் 19

குடாநாட்டில் அடுத்த திங்கட்கிழமை தொடக்கம் பெற்றோல், டீசல் ஆகிய எரிபொருள்கள் கூப்பனுக்கு வழங்கப்படும்.

எரிபொருள்கள் காங்கேசன்துறையில் வைத்து வழங்கப்படும். கூப்பன்களை, காங்கேசன்துறை ஹபர்வியூ விடுதி, யாழ். கோட்டை, பலாலி ஆகிய இடங்களில் உள்ள இராணுவ முகாம்களில் உரிய தஸ்தாவேஜுகளைக் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமாக காங்கேசன்துறை எரிபொருள் விற்பனை நிலயத்தில் வைத்தே எரிபொருள் விநியோகிக்கப்படும்-

கூப்பன் பெறும் இடங்கள் குறிப்பிட்ட இராணுவ முகாம்களில் எந்தெந்தப் பகுதிகளில் வசிப்பவர்கள் எரிபொருள் கூப்பன்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற விபரம் வருமாறு:

* காங்கேசன்துறை ஹாபர் வியூ விடுதி இராணுவ முகாம்:-

மாதகல் துறையில் இருந்து பண்டத்தரிப்பு வீதியில் கிழக்குப் பக்கமாக வசிப்பவர்கள்-

பண்டத்தரிப்பில் இருந்து சண்டிலிப்பாய், மானிப்பாய் வீதிக்குக் கிழக்குப் பக்கமாகவும், வடகிழக்குப் பக்கமாகவும் வசிப்பவர்கள்-

மானிப்பாயில் இருந்து உடுவில். மருதனார்மடம், உரும்பராய் வீதிக்கு வடக்குப்பக்கமாக வசிப்பவர்கள்-

உரும்பராயில் இருந்து புன்னாலைக்கட்டுவன், வயாவிளான், பலாலி வீதிக்கு மேற்குப் பக்கமாக வசிப்பவர்கள்-

மேற் கூறப்பட்ட பிரிவுகள் தெல்லிப்பழை

(4 ஆம் பக்கம் பார்க்க)

மூச்சந்தி மூளி



முகாமில் கூப்பன் எடுக்கிறது பூரண தடையைவிட ஆபத்தான விஷயமெல்லோ..!

கூப்பன் பெற தேவையான நான்கு தஸ்தாவேஜுகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 19

பெற்றோல், டீசல் வாங்கும் கூப்பன்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் பின்வருவனவற்றை பாதுகாப்புப் படை இணைப்பதிகாரியிடம் சமர்ப்பிக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

1. 1987 க்குரிய வாகனப் பத்திரம்.
2. வாகனப் பதிவுப் புத்தகம்.
3. செல்லுபடியான காப்புறுதிப் பத்திரம்
4. உரிமையாளரின் தேசிய அடையாள அட்டை.

முதல் வழங்கப்படும் கூப்பன் இரண்டு வாரங்களுக்குச் செல்லுபடியாகும், தொடர்ந்து வழங்கப்படும் கூப்பன்கள் ஒவ்வொரு மாதத்திற்கும் உரியவையாக இருக்கும்.

ஒவ்வொரு வாகனத்துக்கும் கூப்பன்கள் மூலம் வழங்கப்படும் பெற்ரோல், டீசல் எண்ணெய் பின்வரும் அளவினதாக இருக்கும்;

1. தனியார் மோட்டார்கள்- 1 கிழமைக்கு 14 லீற்றர்.
2. தனியார் வான், லொறி- 1 கிழமைக்கு 45 லீற்றர்.
3. ட்ராக்டர்- 1 கிழமைக்கு 23 லீற்றர்
4. மோட்டார் சைக்கிள் 1 கிழமைக்கு 5 லீற்றர்.

(உ-எ)

நாளை முதல் கூப்பன்

திங்கள் முதல் எரிபொருள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ் மாவட்டத்தில் எரிபொருள் விற்கும் விலையையும் எரிபொருள் கூப்பன், வழங்க ஆரம்பிக்கப்படும் திகதிகளையும் யாழ் அரசாங்க அதிபர் திரு வி. எம் பஞ்சலிங்கம் நேற்று வெளியிட்டார்.

கூப்பன்கள் விநியோகிப்பது நாளை (வெள்ளிக்கிழமை) ஆரம்பமாகும்.

பெற்றோல், டீசல் விநியோகம் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

எரிபொருள் விலைகள் வருமாறு;

பெற்றோல் - ஒரு லீற்றர் ரூபா 15

டீசல் - ஒரு லீற்றர் ரூபா 9-50 சதம்.

(உ-எ)

சிப்பாய்கள் சுட்டு 2 கொள்ளையர் மரணம்

மட்டக்களப்பு, மார்ச் 19

கொள்ளைச் சந்தேக நபர்களை விசாரித்துக் கொண்டிருந்த போராளிகள் மீது சிப்பாய்கள் மேற்கொண்ட திடீர் துப்பாக்கிப் பிரயோகத்தில் நான்கு போராளிகளும், இரு கொள்ளையர்களும் அதே இடத்தில் பலியானார்கள்.

இச்சம்பவம் அண்மையில் மட்டக்களப்பு வீச்சுக்கல்முனை என்னுமிடத்தில் நடைபெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக கூறப்படுவதாவது;

சிங்களவாடிப் பகுதியில் நடைபெற்ற கொள்ளை தொடர்பாக இருவர் மறுநாள் போராளிக் குழு ஒன்றினால் கைதுசெய்யப்பட்டனர்.

கைதானோரின் வாக்குமூலங்களைப் போராளிகள் பதிவு செய்துகொண்டிருக்கையில் நகருக்கு வந்த வவுணதீவு முகாம் சிப்பாய்களுக்கு தகவல் கிடைத்தது.

வீச்சுக் கல்முனை வழியாகச் சென்றுகொண்டிருந்த இ. போ. ச. பஸ் ஒன்றில் சிப்பாய்கள் விரைந்துவந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

பலியானோரில் இரு கொள்ளையரினதும் ஒரு போராளியினதும் சடலங்களை படையினர் எடுத்துச் சென்றனர்.

நீரில் மூழ்கிய ஏனைய மூன்று போராளிகளின் சடலங்கள் மறுநாள் மீட்கப்பட்டு போராளிகளால் தகனம் செய்யப்பட்டன.

(இ-21)

மண்எண்ணெய் லீற்றர் எட்டு ரூபா

யாழ்ப்பாணம், மார்ச்19

மண்எண்ணெய் கொண்டு வருவதற்கும் விற்பதற்கும் அனுமதியளிக்கப்பட்ட 18 முகவர்களின் பெயர்களை யாழ் அரச அதிபர் அறிவித்திருக்கிறார்.

இந்த முகவர்கள் பலாலி பாதுகாப்புப் படை இணைப்பு அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய அனுமதிப் பத்திரத்துடன் அனுராதபுரம் எரிபொ

(4ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை மீது கண்டனம் தெரிவிக்க மன்னிப்புசபை

உலக நாடுகளிடம் கோரிக்கை

வாஷிங்டன், மார்ச் 19

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவிக்கும்படி சர்வதேச மன்னிப்புச் சபை உலக நாடுகளைக் கோரியுள்ளது.

குறிப்பாக இலங்கையுடன் ராஜதந்திர உறவுகளைக் கொண்டுள்ள அமெரிக்கா மற்றும் நாடுகளுக்கே இந்த வேண்டுகோளை சர்வதேச மன்னிப்புச் சபை விடுத்தது.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

★ கடந்த 5 ஆண்டுகளாக இலங்கைப் படைகள் சித்திரவதை செய்வதாக சத்தியக் கடதாசிகள் மூலம் நிரூபிக்கப்பட்ட முறைப்பாடுகள் சபைக்கு வந்துள்ளன.

★ அரசியல் கைதிகளே இப்படிச் சித்திரவதை செய்யப்படுகிறார்கள். சித்திரவதையினால் சிலர் உயிரிழந்தனர்.

★ 1985 ஜனவரியில் யாழ் பல்கலைக் கழக மாணவன் ஒருவன் படிப்பைத் தொடருவ

(4ஆம் பக்கம் பார்க்க)

இந்தியத் தலையீட்டை சாடுகிறார் சிறிமாவோ

தீவிரவாதிகளுக்கு ஆயுதம் வழங்குகிறதாம்

கொழும்பு, மார்ச் 19

இந்தியா ஏதாவது ஒரு வழியில் இலங்கையில் தலையிடுகிறது. தீவிரவாதிகளுக்கு இந்தியா ஆயுதம் வழங்குகின்றது. ஆரம்பத்தில் இருந்தே தீவிரவாதிகளுக்கு இந்தியா ஊக்கமளித்து வருகிறது.

- இப்படி சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்து இருக்கிறார்.

சுதந்திரக் கட்சியிடம் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர திட்டம் உண்டு. அதை இப்போது சொல்ல முடியாது எம்மிடம் தீர்வுக்கான யோசனை இருப்பினும் யாரிடம் அதைத் தெரிவிப்பது?

பயமுறுத்தல் இந்தியாவிடம் இருந்து தான் வருகிறது

பேச்சு நடத்துவதற்கான காலம் பிந்திவிட்டது. அப்படி பேச்சுக்கள் நடந்தால் அது மிகவும் கஷ்டமாகவே இருக்கும்.

- இப்படி திருமதி. பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

(மற்றொரு செய்தி மூன்றாம் பக்கத்தில்)

(உ-எ)

கண்ணிவெடி!

கவசவாகனம் சேதம் சிப்பாய்கள் சிலர் பலி

யாழ்ப்பாணம், மார்ச் 19

புலிகளின் கண்ணிவெடியில் சிக்கிய கவசவாகனம் ஒன்று பலத்த சேதம் அடைந்தது.

இதில் இருந்த சிப்பாய்கள் சிலர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் பலர் காயம் அடைந்திருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

நேற்றுக் காலை கொக்காவிலுக்கும் முறிகண்டிக்கும் இடையில் இந்த கண்ணிவெடித் தாக்குதல் இடம்பெற்றது.

கிளிநொச்சியில் இருந்து கொக்காவில் நோக்கிச் சென்று கொண்டிருக்கும் போதே இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

சேதம் அடைந்த கவச வாகனத்தை சிப்பாய்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் நேற்று கிளிநொச்சி முகாமுக்கு கொண்டு வந்து சேர்த்தனர்.

(இ)

குடாநாட்டு மக்களுக்கு இந்திய நேரடி நிவாரண உதவி எந்தநேரமும் வழங்கப்படலாம்

லோக சபையில் நட்வர்சிங்

புதுடில்லி மார்ச் 71

பொருளாதாரத்தடையினால் பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கையின் வடபகுதி மக்களுக்கு நேரடியாக நிவாரண உதவி வழங்குவது என்ற இந்தியாவின் நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமுமில்லை. எந்த நேரத்திலும் நாம் அதனைச் செயற்படுத்தக்கூடும்.

இப்படி வெளியுறவு இணை அமைச்சர் நட்வர் சிங் நேற்று லோக்சபைக் கூட்டத்தில் அறிவித்தார்.

இலங்கை பற்றிய விசேஷ விவாதத்தின் முடிவில் பேசுகையில் திரு நட்வர்சிங் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

பிரதமரின் விசேஷ பிரதிநிதியாக திரு. தினேஷ் சிங் கொழும்பு சென்று ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்தார்.

அதைத் தொடர்ந்து டிசம்பர் 19 யோசனைகள் திரு. ஜெயவர்த்தனாவுக்கு ஏற்புடையதாக இருந்தது என்று மட்டுமே தகவல் வந்துள்ளது.

டிசம்பர் 19 யோசனையை ஏற்பதாக இலங்கை அரசு இன்னும் ஊர்ஜிதம் செய்யவில்லை அதனை ஊர்ஜிதம் செய்தால் மட்டுமே அந்த யோசனையை தமிழர் அமைப்புக்களிடம் இந்தியா சமர்ப்பிக்கும்.

இலங்கை அரசு டிசம்பர் 19 யோசனையை ஏற்பதாகக் கூறுவதை அப்படியே நம்பமுடியாது.

முன்னரும் பல தடவைகள் இலங்கை தனது முடிவிலிருந்து பின்னுக்குப்போய் மாறுபாடான கருத்தை வெளியிட்டு வந்திருக்கிறது.

கடந்த 48 மணிநேரத்தில் இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகள் குறைந்துள்ளன என்றும் தகவல் வந்திருக்கிறது.

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ. நா. சபை நிறைவேற்றியிருக்கும் தீர்மானம் இலங்கைக்கு பெரும் தோல்வியாகும்.

இப்படி இணை அமைச்சர் நட்வர்சிங் தெரிவித்தார்.

இந்த விவாதத்தில் பேசிய பல எதிர்க்கட்சி

(4 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

19—03—1987

வியாழக்கிழமை

சுபநேரம்,

7-49 முதல் 9-19வரை ராகுகாலம் ;

1-49 முதல் 3-19 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

இலங்கைக்குள் இந்திய ராணுவத்தை அனுப்புவதே ஒரே வழி

சுப்பிரமணியசுவாமி கருத்து

மதுரை, மார்ச் 19

இலங்கைக்குள் தனது இராணுவத்தை அனுப்புவதைத் தவிர இந்தியாவுக்கு வேறு வழியே இல்லை.

டாக்டர் சுப்பிரமணிய சுவாமி மேற்கண்டவாறு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்தியா தனது இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பிய பின்னர் என்ன செய்யவேண்டும்?

இதுபற்றியும் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி விளக்கமளித்தார்.

இலங்கையின் வடபிரதேசத்தில் இந்திய

(4ம் பக்கம் பார்க்க)

சுருட்டுப் பற்ற முயன்றவர் எரிகாயத்திற்கு இலக்கானார்

யாழ்ப்பாணம்- மார்ச் 19

சுருட்டு பற்ற முயன்ற வயோதிபர் நெருப்புக்குச்சியிலிருந்த வெடிமருந்தினால் பலத்த எரிகாயங்களுக்குள்ளானார்.

நெருப்புக் குச்சியிலிருந்த மருந்து சீறிக்கொண்டு பலத்த சத்தத்துடன் குண்டு போல வெடித்ததில் அவரது வாயில் பெரும் காயம் ஏற்பட்டது உடம்பிலும் எரிகாயங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

புத்தூரைச் சேர்ந்த கே. தம்பிஐயா (வயது 51) என்ற நபரே இப்படிக் காயமடைந்தவராவார்-

தற்போது இவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

நெருப்புக் குச்சியிலிருந்த வெடிமருந்து வெடித்தபோது பலத்த சத்தம் கேட்டதாக அவர் கூறினார்.

வெடிச்சத்தம் கேட்டதும் குண்டு ஒன்று வெடித்துவிட்டதாக நினைத்த அயலவர் தனது வீட்டுக்கு ஓடிவந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமாலை 6 45 மணியளவில் புத்தூரில் இடம்பெற்றது.

(உ-10)

பார்த்தசாரதிக்கு மீண்டும் முக்கியத்துவம்

அரசு-போராளிகள் பேச்சு இந்தியா முயற்சித்து வருகிறது

இனப்பிரச்சினை விவகாரம் நேரடியாக ராஜீவிடம்

புதுடில்லி,மார்ச் 19

தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே இறுதிக்கட்டப் பேச்சுக்களை நடத்த இந்திய மத்திய அரசு தீவிர முயற்சி எடுத்து வருகிறது.

பேச்சுக்கள் நடப்பதாக இருந்தால், அது புதுடில்லியிலேயே நடைபெறும். என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன,

இப்பேச்சுக்களில் பங்கு பற்றுவது குறித்து இன்னும் தமிழ்ப் போராளி அமைப்புக்களிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதனிடையில் இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமான ஆலோசனைகளில் திரு. ஜி. பார்த்தசாரதிக்கு மீண்டும் முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருவதாக புதுடில்லிச் செய்திகள் தெரிவித்தன.

அதேநேரத்தில் இனப்பிரச்சினை சம்பந்தமான ராஜதந்திர நடவடிக்கை

(4 ஆம் பக்கம் பார்க்க)

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

சேவை

இந்தியாவில் உயர் கல்வி பயில்வதற்கு விசேடமாக மாணவிகளுக்கு சகல ஒழுங்குகளும் நியாயமான கட்டணங்களுடன் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு: பிசினெஸ் இன்றெடிற் கொம்பனி, 9, அன்னசத்திர ஒழுங்கை, நாவலர் வீதி ஊடாக கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

விற்பனைக்கு

Bairaha Farms Hisex பிறவுன் பேட்டுக்குஞ்சுகள். சேவல் குஞ்சுகள், Chiristombu Farm. Golden Comet பேட்டுக் குஞ்சுகள் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில்.

டானியல் நினைவு தினம்

வல்வெட்டித்துறை: மார்ச்19

எழுத்தாளர் கே. டானியலின் முதலாவது நினைவு தினம் இம்மாதம் 23 ஆம் திகதி திங்கட்கிழமை தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினால் இலந்தைக்காடு வல்வெட்டித்துறையில் மாலை 5 மணிக்கு அனுஷ்டிக்கப்படும். (உ-160)

A/L 89
சனி, ஞாயிறு வகுப்பு
2.00- பிரயோக கணிதம்
3.00- தூயகணிதம்
ஆரம்பம்-21-3-87
ஆசிரியர்:-
திரு. ரவிமோகன்
யாழ்ப்பாணம்
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

Chunnakam Power Station

Quotations for installation of G.I. VALLEY GUTTERS Etc

Sealed quotations in duplicate, are invited for the supply and installation of valance boards and G. I valley gutters (gauge 24) and down pipes after removing the existing corroded gutters etc., for the entire length of the Power Station roof 730 ft. in 3 sections.

Tender documents could be obtained from the undersigned on payment of a non-refundable deposit of Rs 50/- by way of a Money Order obtained in favour of the General Manager, Ceylon Electricity Board, Colombo.

Quotations should be sealed and forwarded to reach the Electrical Engineer, Central Power Station, Chunnakam on or before 10-00 a. m. on 21-04-1987 with the left hand side of the envelope marked "Quotations for the supply of Valley Gutters"

S SIVANNESAN
Electrical Engineer
Central Power Station, Chunnakam.

மக்கள் மீளக் குடியேறினுல் இராணுவம் வாபஸ் பெறுமாம்

பிரிகேடியர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19 கட்டுவன் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் தமது வீடுகளுக்கு திரும்பி மீளக் குடியேறத் தயாராகும் அங்கு நிலை கொண்டுள்ள இராணுவமும் பின்வாங்கி பலாலி முகாமுக்குள் செல்லத் தயார்.

இவ்வாறு பிரிகேடியர் ஜெரி சில்வாவும், இராணுவ - பொதுசன தொடர்பதிகாரி எச். ஆர். ஸ்ரீவனும் தெரிவித்தனர்

தமது வீடுகளைப் பார்வையிடச் சென்ற கட்டுவன் பகுதி மக்களிடமும் வலி வடக்கு பிரஜைகள் குழுத் தலைவரிடமும் அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

இடம் பெயர்ந்த பொதுமக்கள் மீளக் குடியேறும் பட்சத்தில், பாதிக்கப்பட்ட சகல வீடுகளும் இராணுவத்தினரால் உடன் ஒரு மாதத்துக்குள் கட்டிக் கொடுக்கப்படும்.

குடியேறும் மக்களுக்கு பாதுகாப்பும் உத்தரவாதமும் அளிக்கப்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

''வயாவிளான் பகுதியிலிருந்து பின்வாங்கிய இராணுவம் மீண்டும் அப்பகுதியை ஆக்கிரமித்துள்ளதே?'' என பிரசைகள் குழுவினர் பிரிகேடியரிடம் வினவியபோது;

''வயாவிளான் பகுதி பிரசைகள் குழுக்களின் வேண்டுகோளின் படி நாம் அப்பகுதிகளிலிருந்து முகாமிற்கு பின் வாங்கினோம்.

ஆனல் அப்பகுதிகளிலிருந்து எம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களாலேயே நாம் மீண்டும் பல இழப்புக்களுடன் அவ்விடங்களைக் கைப்பற்ற வேண்டிய நிலை உருவானது--என்று பிரிகேடியர் கூறினர். (இ - ள)

நவீல்ட் இயங்குகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 19 கைதடி நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை தொடர்ந்து வழமை போல் நடைபெறுகின்றது என பாடசாலை அதிபர் பெற்றோருக்கு அறிவித்திருக்கிறுர்.

நாவற்குழிப் பகுதியில் நடைபெற்ற சம்பவங்களையடுத்து மேற்படி பாடசாலையின் பிள்ளைகளை பெற்றோர் வந்து அழைத்துச் சென்றிருந்தனர். (உ)

கால்நடை வைத்தியர் இல்லாதது பெரும் குறை

சுன்னாகம், மார்ச் 19 வலி-தெற்கு உதவி அரச அதிபர் பிரிவு இரு உள்ளூராட்சி மன்றங்களை உள்ளடக்கியதாயினும் ஏனைய உதவிஅரச அதிபர் பிரிவுகளைவிட கூடிய கால்நடை வளர்ப்போரும் பால் உற்பத்தியாளரும் நிறைந்த பிரதேசமாகும். ஆகவே இப்பகுதியில் கால்நடை வைத்தியர் இல்லாத குறையை நீக்கி உதவுக.

சுன்னாகம் பிரசைகள் குழு கால்நடை வைத்திய யாழ் பிரதேச ஆணையாளரை மேற்கண்டவாறு கேட்டுள்ளது.

சுன்னாகம் பிரசைகள் குழுத் தலைவர் திரு. தி மாணிக்கவாசகர் இது தொடர்பான கடிதம் ஒன்றை யாழ் பிரதேச ஆணையாளருக்கு அனுப்பி உள்ளார். (இ-27)

வீடமைப்பு போட்டி

கிளிநொச்சி மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் நடத்தப்படும் உள்ளூர் வளங்களைக் கொண்டு குறைந்த செலவில் வீடமைக்கும் போட்டியில் பூநகரி, பளை, கிளிநொச்சி ஆகிய உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளிலிருந்து இருநூற்றுக்கும் அதிகமானேர் பங்குபற்றுகின்றனர். (இ-110)

மறை அறிவின் அவசியம் வலியுறுத்து

இளவாலை, மார்ச் 19 நாம் வாழ எண், எழுத்து, விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்கிறோம். ஆனல் மறை அறிவோ தாயின் உதரத்தில் இருக்கும் வேளையிலிருந்தே நமக்கு அத்தியாவசியமாகிறது.

இளவாலை புனித அன்னம்மாள் வெளியரங்கில் இளவாலை மறைவட்ட மறையாசிரியர் தினவிழா நடைபெற்றது

பிரதம விருந்தினராக வருகைதந்த யாழ் மறை மாவட்ட மறைக்கல்வி இயக்குநர் அருள்திரு ஆர் எம். ஜீ. நேசநாயகம் அடிகள் மேற்கண்டவாறு கூறினர்

இளவாலை மறைவட்ட மறைக்கல்வி இயக்குநர் அருள்திரு சீ. ஜெயக்குமார் தலைமையில் விழா நடைபெற்றது.

இளவாலை மறைவட்ட முதல்வர் அருள்திரு அ. இராசநாயகம் அடிகள், இளவாலை பங்குத்தந்தை அருள்திரு மை ரீ. பற்றிக் அடிகள் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

அருள் திரு. அ இராசநாயகம் அடிகள் பேசுகையில், கலாசாலைகளில் கிழமையில் இருபாடங்கள் மாத்திரம் மறைக்கல்வி கற்பிக்கப்படுவது போதாது என்றுர்.

பரிசளிப்பும், கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன

யாழ் மறை மாவட்ட மறைக்கல்வி இயக்குநர் பரிசில்களை வழங்கினுர். (இ-48)

ஆசிரியரிடம் அறவிடப்பட்ட

உறுப்புரிமைப் பணம் திரும்பக் கிடைக்கும்

வட்டுக்கோட்டை, மார்ச்19

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள கடன் வழங்கு சபையினல் ஆசிரியர்களிடமிருந்து கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக மாதந்தோறும் அறவிடப்பட்டு வந்த உறுப்புரிமைப் பணம் விரைவில் ஆசிரியர்களுக்கு திருப்பி வழங்கப்படவுள்ளது

கடன் வழங்கு சபை தற்போது நிறுத்தி வைக்கப்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது

இப்பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் பாடசாலை அதிபர்களுக்கூடாக ஒவ்வொரு ஆசிரியருக்கும் இம்மாத இறுதியில் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தாம் சேர்ந்து கொண்ட திகதி, உறுப்புரிமை இலக்கம் கழிக்கப்பட்ட தொகை முதலான விவரங்களைச் சமர்ப்பித்து தமது பணத்தைப் பெற்றுக் கொள்ளலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-161)

உடல் நலம், உளவளம் மாணவர்களுக்கு அவசியம்

யாழ்ப்பாணம், மார்ச்19 ஆரோக்கியம் என்பது உடல் நலத்தையும் உளவளத்தையும் உள்ளடக்கியது. இரட்டையர்கள் போன்ற இவை இரண்டும் சமமாக சிறப்பாக அமையாவிடின் மாணவரின் எதிர்காலம் ஒளிராது.

இவ்வாறு யாழ் கல்வி அதிகாரி திரு சி. புலேந்திரன் கூறினர்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினர்

கல்லூரி அதிபர் திரு. பொன் நாகரத்தினம் அவர்களின் தலைமையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. திரு புலேந்திரன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

விளையாட்டுக்கள் உடலுக்கு உரம் தருவதுடன் கூட்டுமுயற்சி, தலைமைத்துவம், முகாமைத்துவம், மனநம்பிக்கை, வெற்றி தோல்வியை சலனமின்றி சமமாக ஏற்கும் மனப்பக்குவம் ஆகியவற்றை அளிக்கின்றன.

வெறும் ஏட்டுக் கல்வி ஒருவருக்கு பரந்த நோக்கைத் தரமாட்டாது.

விளையாட்டுக்கள் பல மதத்தவர், இனத்தவர், பல தேசத்தவர்களை இணைக்கும் பாலம் போன்றவை.

கல்லூரிகளின் நோக்கம் தனித்து வகுப்பறைகளில் கல்வி புகட்டுவது அல்ல. விளையாட்டுக்களிலும் ஈடுபடுத்தி மாணவனை நற்பண்புகளுடையவனாக உருவாக்குவதே- என்றுர்.

திருமதி இருபராணி புலேந்திரன் பரிசில்களை வழங்கினுர். உப அதிபர் திரு சோ சோமசேகரம் நன்றி கூறினுர்.

விளையாட்டுப் போட்டிகளில் கந்தையா இல்லம் முதலாம் இடத்தையும் நாகநாதன் இல்லம் இரண்டாம் இடத்தையும் பெற்றன (உ-ள-27)

சைவ பரிபாலன சபையினர் அகில இலங்கை ரீதியில் நடத்திய பண்ணிசைப் போட்டியில் மேற்பிரிவில் முதலாம் பரிசு பெற்ற யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மாணவி செல்வி சுஜாத்தா பத்மசிகாமணிக்கு நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு க சிவவிநாயகமூர்த்தி முதற் பரிசுக்கான தங்கப்பதக்கத்தை அணியும்போது எடுக்கப்பட்ட படம்.

நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் புண்ணிய நாச்சி அம்மையார் தினத்தில் இப்பரிசளிப்பு விழா நடைபெற்றது. (இ-161)

அறியாமை இருளை அகற்றுவதே கல்வி

பேராசிரியர் பேச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 19 மனிதனை அறியாமையில் இருந்து அறிவிற்கு இட்டுச்செல்வதே கல்வியின் நோக்கமாகும்

மனிதனின் உள்ளொளியைப் பெருக்கி களிப்பிலா ஆனந்தத்தை மிளிரச் செய்வதே சமயத்தின் இலக்காகும்

—இவ்வாறு கூறினர் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன்.

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் 150 ஆவது ஜெயந்தி தினமும் ஸ்ரீ இராமகிருஷ்ண இயக்கத்தின் 100 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் கடந்த சனிக்கிழமை பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம ஆதரவில் நல்லை ஆதீனத்தில் நடைபெற்றன.

இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகையிலேயே பேராசிரியர் இவ்வாறு கூறினர்.

நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரையுடன் விழா ஆரம்பமானது.

'உதயன்' ஆசிரியர் திரு ம.வ. கானமயில்நாதன் செய்தி மடல் வெளியீட்டு உரையை நிகழ்த்தினர்.

பேராசிரியர் வித்தியானந்தன் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

கல்வியின் மூலம் ஞானச்சுடர் பெறுதல் எவருடைய ஏகபோக உரிமையும் அல்ல. மனிதன் தெய்வத்தன்மை பொருந்தியவன் எனும் போது அறிவு அவனது பொதுச் சொத்தாக இருக்கிறது.

ஆகவே ஞானச்சுடரைப் பெறுவதற்கு எவரும் கட்டணம் விதிக்கவோ அன்றிப் பட்டங்கள் வழங்கவோ முடியாது என்கிறுர் இராமகிருஷ்ணர்.

எல்லோரும் அறிவை அடைந்துகொள்ள முடியும்.

—இப்படி அவர் உரையாற்றினர்.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா பாதிக்கப்பட்ட பல பொது மக்களுக்கு உடுபுடவைகளையும் உதவிகளையும் வழங்கினர். (உ-10)

கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள்:

பல்கலைக்கழக 'ஏ' அணி வென்றது

யாழ்ப்பாணம், மார்ச்19 யாழ்ப்பாண பல்கலைக்கழக விளையாட்டுச்சபை, யாழ் மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் 'லீக்' முறையிலான கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் யாழ் பல்கலைக்கழக ஆடுதிடலில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன

ஆண்கள், பெண்கள் என இரு பிரிவுகளாக நடைபெறும் இப்போட்டிகளில் ஆண்களுக்கான போட்டிகள் மின்னொளியில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது

யாழ்ப்பாணம் கிறீன் பீல்ட் விளையாட்டுக்கழக அணிக்கெதிரானகூடைப் பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாண பல்கலைக் கழக 'ஏ' அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப் பட்டது.

நேற்று முன்தினம் இப்போட்டிநடைபெற்ற போது ஆட்டம் முடிவடைய 14 நிமிடங்கள் இருக்கையில் மின்தடை காரணமாக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

சுமார் 20 நிமிடங்களின் பின் மின்சாரத்தடை நீங்கியபோது நடுவர்கள் இரு அணிகளையும் எஞ்சியுள்ள 14 நிமிட நேர ஆட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைத்தனர்.

20 நிமிடங்களுக்கு மேல் இளைப்பாறியதால் தொடர்ந்தும் தம்மால் ஆடமுடியாது என்று தெரிவித்து கிறீன்பீல்ட் அணி வெளியேறியது.

ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது பல்கலைக்கழக அணி 'ஏ' 27 புள்ளிகளையும் கிறீன்பீல்ட் அணி 24 புள்ளிகளையும் பெற்றிருந்தன.

தொடர்ந்தும் கிறீன்பீல்ட் அணி ஆடாததால் பல்கலைக்கழக 'ஏ' அணி வெற்றிபெற்றதாக மத்தியஸ்தர்கள் அறிவித்தனர்.

பல்கலைக்கழக அணியின் சார்பில் எம். சி. சோமர், எல். சுகிர்தராஜா ஆகியோர் தலா 8 புள்ளிகளையும், சகோதரர் ஜெரானிஸ் லொஸ் 5 புள்ளிகளையும் கிறீன்பீல்ட் அணியின் சார்பில் எஸ் சகாயராஜா 11, எல், அருள்தாஸன் 7, எச். டி. தம்பு 4 புள்ளிகளையும் பெற்றனர்..

இதே தினம் நடைபெற்ற பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ் பல்கலைக்கழக 'பி' அணியை யாழ்ப்பாணம் 'பமிலியன்ஸ்' அணி 10 இற்கு 50 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வென்றது.

பல்கலைக்கழக அணியின் சார்பில் செல்வி சிறிசுஜந்தி 6 புள்ளிகளையும் 'பமிலியன்ஸ்' அணியின் சார்பில் செல்விகள் ரி. துளசி, டி. ஹாட்ஸ் ஆகியோர் முறையே 28, 10 புள்ளிகளையும் பெற்றனர்:

முன்னைய முடிவுகள்

இதற்கு முந்திய தினங்களில் நடைபெற்ற போட்டிகளின் முடிவுகள்.

ஆண்கள்

★ சென் ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணியை யாழ் பல்கலைக்கழக 'ஏ' அணி 18 இற்கு 59 என்ற புள்ளி அடிப்படையில் வென்றது.

★ பல்கலைக்கழக 'ஏ' அணி பல்கலைக்கழக 'பி' அணியை 34 இற்கு 20 என்ற புள்ளி அடிப்படையில் வென்றது

★ யாழ் பல்கலைக்கழக 'பி' அணி யாழ் வை. எம். சி ஏ. அணியை 42 இற்கு 28 என்ற புள்ளி அடிப்படையில் வென்றது.

★ சென் ஜோன்ஸ் 'ஏ' அணி யாழ் பல்கலைக்கழக 'பி' அணியை 53 இற்கு 24 என்ற புள்ளி அடிப்படையில் வென்றது.

★ சென் ஜோன்ஸ் 'பி' அணி. வை. எம். சி ஏ. அணியை 30 இற்கு 25 என்ற புள்ளி அடிப்படையில் வென்றது.

★ பல்கலைக்கழக 'ஏ' அணி சென் ஜோன்ஸ் 'ஏ' அணியை 25 இற்கு 18 என்ற புள்ளி அடிப்படையில் வென்றது.

★ கிறீன்பீல்ட் அணி சென் ஜோன்ஸ் 'பி' அணியை 68 இற்கு 25 என்ற புள்ளி அடிப்படையில் வென்றது.

★ கிறீன்பீல்ட் அணி பல்கலைக்கழக 'பி' அணியை 81 இற்கு 35 என்ற புள்ளி அடிப்படையில் வென்றது

பெண்கள்

★ யாழ் பல்கலைக்கழக 'ஏ' அணி திருக்குடும்ப கன்னியர் மட அணியை 35 இற்கு 14 என்ற புள்ளி அடிப்படையில் வென்றது.

★ பமிலியன்ஸ் அணி திருக்குடும்ப கன்னியர் மட அணியை 16 இற்கு 12 என்ற புள்ளி அடிப்படையில் வென்றது.

★ பல்கலைக்கழக 'ஏ' அணி பல்கலைக்கழக 'பி' அணியை 48 இற்கு 4 என்ற புள்ளி அடிப்படையில் வென்றது. (இ-7)

விளையாட்டரங்கு

வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகம் வெற்றி

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவினல் நடத்தப்பட்ட 'எல்லே' போட்டியில் வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழகம் 33 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

சித்தன்கேணி கலைநகர் நேதாஜி விளையாட்டுக்கழகமும் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகமும் இப்போட்டியில் மோதிக்கொண்டன. (இ-161)

ஒட்டுசுட்டானில்

முள்ளியவளை மார்ச் 19 ஒட்டுசுட்டான் உப வட்டாரப் பாடசாலைகளின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் கற்சிலைமடு கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் நடைபெறுகின்றன

சாவகச்சேரியில் நடைபாதை

சாவகச்சேரி, மார்ச்19 சாவகச்சேரி நகரசபை பஸ் நிலையத்தை அடுத்துள்ள கண்டி வீதியை விஸ்தரித்து மக்களின் போக்குவரத்துக்கு வசதியாக நடைபாதை அமைக்க முன் வந்துள்ளது.

தனியார் வாகனங்களை நிறுத்துவதற்கும் தற்போது பிரத்தியேக இடத்தை ஒதுக்கிக் கொடுத்துள்ளது (இ-31)

மக்கள் முகம்

சமாதானசபை

வட்டுக்கோட்டை, மார்ச்19

சில்லாலை தெற்கு புனித யாகப்பர் ஆலய பங்கு மக்கள் மத்தியில் எழும் பிரச்சினைகளை விசாரித்து இணக்கமாகத் தீர்த்து வைக்கு முகமாக ''புனித யாகப்பர் ஆலய பங்கு மக்கள் சமாதான சபை'' என ஒரு சமாதான சபை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது

இச்சபைக்கான உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்:- பங்குத் தந்தை அருட்திரு ப இருதயநாதன் அடிகளார் உபதலைவர்:- திரு. எஸ். பி. யோகதாஸன் செயலாளர்:- திரு. அ. செபமாலைமுத்து இணைச் செயலாளர்:- திரு ம. அமிர்தநாதர் பொருளாளர்:-திரு அ. பத்திநாதர். (இ-161)

அமைதியை விரும்பாமல் பழைமை பேசுவோருக்கு பாடம் புகட்டவேண்டும்

கல்முனை எம். பி. கூறுகிறுர்

அம்பாறை, மார்ச் 19 'இந்த நாட்டில் அமைதி, சமாதானம் ஏற்படக் கூடாது என விரும்பும் ஒரு சாரார் துட்டகைமுனு, சோழ அரசன் போன்றவர்கள் காலத்து சரித்திரங்களைக்கூறி பழைமை பேசிக் கொண்டிருக்கிறுர்கள். இளைஞர்கள் இத்தகையவர்களுக்குப் பாடம் புகட்டவேண்டும்.

முல்லைத்தீவு மாவட்ட அமைச்சரும், கல்முனைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனுப் ஏ. ஆர். மன்சூர் மேற்கண்டவாறு கூறினர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கல்முனை தெற்குப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் இளைஞர் மாநாடு ஒன்றை அண்மையில் நடத்தியது.

இந்த மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

இந்த மாநாட்டில் சுமார் எண்ணூறு இளைஞர், யுவதிகள் பங்குபற்றினர்.

ஜனுப் மன்சூர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

'இந்த நாட்டில் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முடியாத கல்விக் கொள்கை அமுல் நடத்தப்பட்டு வந்ததாலும் ஒரு சமூகம் மற்ற சமூகத்தை அழித்து முன்னேற வேண்டுமென்ற குறுகிய நோக்கில் செயற்பட்டு வந்ததாலுமே இன்று அமைதியற்ற நிலையில் நாடு தத்தளித்துக் கொண்டிருக்கிறது

இன்று நாட்டின் சீர்கேடான நிலைமையாலும், சமூக ஒற்றுமையின்மை காரணமாகவும் அபிவிருத்திகள் குன்றியுள்ளன-

சீரான நிலைமைகளும், அமைதியும் ஏற்படாதவிடத்து எவ்வித ஆக்கப் பணியையும் எம் பிரதேசங்களில் மேற்கொள்ள முடியாது என்றுர் (உ-14)

VACANCY

Enterprises requires two Female Assistants (Office in safty place)

Qualification: Passed G C E (O/L)
(Preferenc: Typing & Shorthand)

Salary: Rs. 700 plus Allowances.

Please come personally with original Certificates and testimonials on Friday 20 th and Saturday 21st between 9-00 a m to 1-00 p. m.

J. & S. ENTERPRISES
(Angalin Garments Upstairs)
24/1, Power House Road,
Jaffna.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

ஆயுத பலத்திலும் பார்க்க உண்மையின் பலமே உள்ளார்ந்த பலமாகும்

— பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா

உதயன்

இல,15, [illegible] ஒழுங்கை தொலைபேசி: 24805
22078
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம் 19-03-1987 [illegible]. 88

பொருளாதாரத் தடையின் மூன்றுவது பாகம் இது!

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் மீது விதிக்கப்பட்ட எரிபொருள் தடை இன்னும் நீக்கப்படவில்லை. வெளிநாடுகளுக்குக் காட்டுவதற்காக தடையில் சிறு தளர்த்தல் வாரத்துக்கு 3 கலனும், ஒரு கலனும் எந்த விதத்தில் மக்களுக்கு உதவப்போகிறது? சர்வதேச நிர்ப்பந்தத்துக்குப் பணிந்ததாகக் காட்டும் சற்றுப் பணிவு பொதிந்த தந்திரம் இது: ஒரு கண்துடைப்பு அவ்வளவு தான்.

நாட்டின் மற்றெல்லாப் பகுதிகளிலும் எரிபொருள் விநியோகம் தாராளம் வட பகுதிக்கு மட்டும் தடையும், தளர்வும். எரிபொருள்களைத் தாராளமாக விநியோகித்தால் வடபகுதி மக்கள் அவற்றை எடுத்துச் சென்று தென்னிலங்கையை எரித்துவிடுவார்கள் என்ற அச்சம் போலும் அரசுக்கு!

எரிபொருள் தடைக்கும் சரி, தளர்வுக்கும் சரி அரசாங்கம் கூறும் காரணங்களைக் கேட்கும்போது, முன்சொன்னதையும் ஒன்றாகச் சேர்க்காமல் தவிர்த்தது சிறு கவனயீனமாக இருக்குமோ என எண்ணத் தோன்றுகிறது

எரிபொருள் தடைக்கு அடுத்து, வவுனியாவுக்கு இப்பக்கமாக மேற்கொள்ளப்பட்ட தொலைபேசித் துண்டிப்பு இன்னமும் சீராக்கப்படவில்லை. அதாவது தொலைபேசித் தடை இன்னமும் நீக்கப்படவில்லை. அதனைத் தளர்த்துவது குறித்துக் கூடவும் அரசுக்கு எண்ணம் இருப்பதாகத் தெரியவில்லை.

பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், கூட்டம் கூடும் சுதந்திரம், தொழிலைத் தெரிவு செய்யும் சுதந்திரம் என்பன குறித்து அதி உத்தமர் கூட்டத்துக்குக் கூட்டம் வாய் கிழியக் கத்துகிறார். ஆனால் வடபகுதி மக்களின் தகவல் சுதந்திரமும், தொலைத் தொடர்புச் சுதந்திரமும் அப்பட்டமாகப் பறிக்கப்பட்டிருக்கின்றன.

மனித உரிமை மீறல் குறித்து ஐ. நா. வில் தீர்மானம் கொண்டு வந்ததற்காக இலங்கை அரசும், கொழும்புப் பத்திரிகைகளும் இந்தியாவையும், ஆர்ஜென்ரீனாவையும் திட்டித் தீர்க்கின்றன.

ஆனால் தொலைத்தொடர்பு, தகவல் பரிமாற்றம் என்பனவும் மக்களுக்கு உள்ள அடிப்படை உரிமைகள் என்பதை அரசு தெரிந்து கொள்ளவில்லைப் போலும்,

தொலைத் தொடர்பு இல்லையெனில் வர்த்தகம், செய்தித் தொடர்பு உட்படப் பலதுறைகளிலும் மக்களுக்குப் பாதிப்பு உண்டாகும்.

வடக்கு வேறு பிரதேசம் அல்லது வேறு நாடு அதற்கும் தெற்குக்கும் தொடர்பு எதுவும் தேவை இல்லை இத்தகைய கோட்பாட்டுடன் தொலைபேசிச்சேவை துண்டிக்கப்பட்டிருந்தால் அரசாங்கமே தனிநாடு ஒன்றை அங்கீகரித்ததாகக் கொள்ளலாம்!

எரிபொருள் தடையும், தொலைபேசித் தடையும் வெளிப்படையாகத் தெரிந்த பொருளாதாரத் தடைகள்.

ஆனால் வெளியில் தெரியாத விதத்தில் மூன்றுவது பொருளாதாரத் தடை ஒன்றும் யாழ் குடாநாட்டு மக்கள் மீது விதிக்கப்பட்டிருக்கிறது.

ஆம். அதுதான் நேற்றைய உதயனில் அம்பலத்துக்குக் கொண்டு வரப்பட்ட நிதித் தடை.

மாவட்ட அபிவிருத்தி சபைகள் தான் இப்போது அந்தந்த மாவட்டங்களில் உள்ள கிராமங்கள், பட்டினங்கள் என்பனவற்றில் மக்கள் தேவைகளை நிறைவேற்றுகின்றன.

வீதிகளை அமைத்தல், பராமரித்தல், மின்சார விநியோகத்தை விஸ்தரித்தல், வைத்திய நிலையங்கள், சந்தைகள், சிறு கைத்தொழில் நிலையங்கள், பாடசாலைக் கட்டடங்கள் என்பனவற்றைக் கட்டுதல், பராமரித்தல் உட்பட மக்களின் பிரதான தேவைகளை அபிவிருத்தி சபைகளின் உப அலுவலகங்களே செய்கின்றன.

யாழ் அபிவிருத்திச் சபை இந்த வருடத்தில் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, நிதித் தேவை மதிப்பிடப்பட்டு அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது. உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் மதிப்பிடப்பட்ட 225 லட்சம் ரூபா நிதியை வழங்கப் பிரதமர் அங்கீகாரம் அளித்திருந்தார்.

காலாண்டுத் தவணை முறையில் தான் அங்கீகரிக்கப்பட்ட பணம் வழங்கப்படுவது உண்டு. முதல் காலாண்டு முடிவதற்கு இன்னும் 12 நாட்கள் இருக்கின்றன. பணம் வரவில்லை.

ஒதுக்கப்பட்ட பணம் உரிய காலத்தில் வரவில்லை என்றால் அது தடுக்கப்பட்டிருக்க வேண்டும். இல்லையேல் அரசு பராமுகமாக நடந்து கொண்டிருக்க வேண்டும் என்பதே முடிவாகும்.

பாதுகாப்புச் செலவு என்ற பெயரில் தமிழ் மக்களை அழிப்பதற்காகக் கோடி கோடியாகச் செலவு செய்யப் பணம் இருக்கும் போது, யாழ் அபிவிருத்திச் சபைக்கு ஒதுக்கப்பட்ட பணத்தைக் கொடுக்க நிதியமா இல்லை?

பணத்தை வழங்குவதில் சில கிழமைகள் தாமதம் ஏற்படுவது வேறு. உரிய கால இடைவெளி முடியும் தறுவாயிலும் அது வழங்கப்படவில்லை என்றால் நிச்சயமாகப் புறக்கணிப்பு. புறக்கணிப்பு தடைக்கு நிகரானது.

மொத்தத்தில் வடபகுதி மக்களின் அடிப்படை வசதிகளை, உரிமைகளை மறுக்கும் திட்டத்தின் மூன்றுவது பாகம் இதுவாகும்.

இதுவும் உலகின் கவனத்துக்குக்கொண்டு வரப்பட வேண்டியதொன்று.

★ பிலிப்பீன்ஸில்

ராணுவ நிலையம் மீது குண்டுத் தாக்குதல்

ஜெனரல்கள் ஏழு பேர் உட்பட பல உயர் அதிகாரிகள் காயம்

மணிலா, மார்ச் 18: பிலிப்பீன்ஸ் ராணுவ பயிற்சி கலாசாலையொன்றில் நிகழ்ந்த வெடிகுண்டு விபத்தில் மூவர் பலியானார்கள். பல உயர் ராணுவ அதிகாரிகள் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்த உயர் அதிகாரிகளில் பிலிப்பீன்ஸின் ஏழு ராணுவ ஜெனரல்களும் அடங்குவர்.

மனிலாவிற்கு 25 மைல் வடக்கே உள்ள முக்கியமான ராணுவ பயிற்சி நிலையமொன்றின் கூரை மீது வீசப்பட்ட சக்தி வாய்ந்த குண்டினால் இந்த விபத்து நேரிட்டது.

ராணுவ பயிற்சி ஒத்திகையில் ஈடுபட்டிருந்த 100 சிப்பாய்கள் இதனால் காயமடைந்ததுடன் பிரதான கட்டடம் ஒன்றும் தகர்க்கப்பட்டுள்ளது

கம்யூனிச கிளர்ச்சியாளர்கள் வேறு ஓரிடத்தில் 18 ராணுவ சிப்பாய்கள் சென்ற கவச வாகனங்களையும் வெடி குண்டு வைத்துத் தகர்த்ததில் அனைவரும் பலியானார்கள்.

அடுத்த வாரம் ஜனாதிபதி அக்கினோ கலந்து கொள்ளும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக ராணுவ பயிற்சி நிலைய ஒத்திகையும் கவசவாகனங்களின் பவனியும் இடம் பெற்றிருந்தன.

இந்த விபத்துகளில் சிக்கி உயிரிழந்தவர்களில் ஒருவர் அடுத்த வாரம் ஜனாதிபதி அக்கினோவால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட இருந்தார் எனவும் அறிவிக்கப்பட்டது (ஒ)

ஆக்க வேலைகளுக்கு அணுசக்தி பயன்

விரைவில் மாநாடு

வாஷிங்டன், மார்ச் 18 அணு சக்தியை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்துவதில் சர்வதேச ஒத்துழைப்பு ஊக்குவிக்கப்படவிருக்கின்றது

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் இந்த நோக்கத்திற்காக இம்மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 10 ஆம் திகதிவரை ஜெனீவாவில் மாநாடு ஒன்றைக் கூட்டவுள்ளது.

பொருளாதார சமூக அபிவிருத்திக்கு அணு சக்தியைப் பயன்படுத்தும் வழிகள் மற்றும் இத்துறையில் ஒத்துழைப்பை வளர்ப்பது பற்றியும் மாநாட்டில் ஆராயப்படும்.

அண்மையில் அணுசக்தி ஆலைகள் சம்பந்தப்பட்ட சில விபத்துக்கள் இடம் பெற்றிருப்பதால் எதிர்காலத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அவதானமாக இருக்க வேண்டும் என இப்பொழுது சர்வதேச அணுசக்தி அதிகாரசபை சமர்ப்பித்துள்ள ஆலோசனைகள் மாநாட்டில் பரிசீலிக்கப்படும். (ஒ)

வெடி மருந்துகள் கைப்பற்றப்பட்டன

மதுரை, மார்ச் 18 மதுரையில் வீடொன்றிலிருந்து ஏராளமான வெடிமருந்துகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

20 சரைகள் அமோனியம் நைத்ரேற், 55 சரைகள் கறுப்பு வெடிப் பவுடர், 40 சரைகள் கந்தகம், 190 ஜெலட்டின் தடிகளும், 140 மின்சார இயக்கும் கருவிகளும் நீண்ட நூல் சரங்களும் சிறிய போத்தல்களும் கைப்பற்றப்பட்டன.

இவற்றை வைத்திருப்பதற்கான உரிய அனுமதிப்பத்திரங்கள் இல்லாததால் வீட்டுச் சொந்தக்காரர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ)

நைஜீரியாவில்

திடீர் நீதிமன்ற தீர்ப்பை எதிர்நோக்கும் 700 பேர்

லாகோஸ், மார்ச் 18 நைஜீரியாவின் வடபகுதியில் ஏற்பட்ட கலவரங்களைத் தொடர்ந்து 700 க்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் திடீர் நீதி மன்றத் தீர்ப்பினை எதிர்நோக்கியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 14 வயதுக்குட்பட்டவர்களும் அடங்குகின்றனர்.

தீ வைப்பு, கொலை, தேசத்துரோகம் ஆகிய குற்றச்சாட்டுக்கள் நிருபிக்கப்பட்டால் இவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படலாம்.

குற்றச்சாட்டுகளை விரைவாக விசாரித்துத் தீர்ப்பு வழங்குவதற்கென ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட நீதிமன்றம் உருவாக்கப்பட்டுள்ளது.

தீர்ப்புக்கு எதிராக எவரும் மேன்முறையீடு செய்ய முடியாது

தீவிரவாத இயக்கங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக நைஜீரியாவின் ராணுவ ஆட்சியாளர் தெரிவித்தனர். (ஒ)

வெளி உலகில்

இரு கொரியாக்களும் சமரசத்திற்கு சம்மதம்

சியோல், மார்ச் 18 தென் கொரியாவும் வட கொரியாவும் தம் முன் நீண்ட காலமாக நிலவி வரும் பிரச்சினைகளை சுமுகமாக தீர்த்துக் கொள்வதற்கு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்குச் சம்மதித்துள்ளன

இப்பேச்சுவார்த்தைகள் பிரதம மந்திரிகளுக்கிடையில் நடைபெற வேண்டும் என்ற வட கொரியாவின் சிபார்சை தென் கொரியா ஏற்றுள்ளது

இப்பேச்சு வார்த்தைகளில் பாரியநீர்மின்சார அணைக்கட்டு ஒன்றை இரு நாடுகளுக்கு இடையிலுமான நதி மீது அமைப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ)

79 ஆண்டு சிறைத்தண்டனை

டுபாய், மார்ச் 18 ஐக்கிய அரபுக் குடியரசின் அரபு செலாவணி நிதியத்தின் முன்னாள் அலுவலரான ஜவார் ஹாஹிக் எட்டுக்கோடி அமெரிக்க டாலருக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்த குற்றத்திற்காக 79 ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்றார்.

நம்பிக்கை மோசடி, ஆள்மாறாட்டம்போன்ற குற்றங்களுக்காக இவர் கைது செய்யப்பட்டிருந்தார். (ஒ)

பாக். மாணவர் மோதல்

இஸ்லாமாபாத், மார்ச் 18 பாகிஸ்தானில் வட மேற்கு எல்லையில் நேரிட்ட கோஷ்டி மோதல்கள் காரணமாக அங்குள்ள சகல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளன.

இந்த மோதல்களில் பல மாணவர்கள் பலியாகினர். பலர் காயமடைந்தனர்.

வலதுசாரி, இடதுசாரி மாணவர்களிடையே இந்த மோதல்கள் ஆரம்பமாகின. (ஒ)

பின்லாந்தில் புதிய அரசு

ஹெல்சிங்கி, மார்ச் 18 பின்லாந்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் எதிர்க் கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சி நாடாளுமன்றத்தில் ஒன்பது இடங்களை இதுவரையில் அதிகமாகப் பெற்று ஆட்சிக்கு வரும் நிலையில் உள்ளது.

21 ஆண்டுகளுக்குப் பின்னர் இப்பொழுது அவர்கள் ஆட்சி அமைக்கக் கூடும்.

90 வீதவாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் பிரதமர் கலேவி சோஸாவின் சமூக ஜனநாயகக்கட்சி பெரும்பான்மை வலு இழந்துள்ளது. (ஒ)

முதற் தடவையாக இந்திய ஏவுகணை

புதுடில்லி, மார்ச் 18 ஒரு கண்டத்திலிருந்து இன்னுமொரு கண்டத்திற்குச் செல்லக் கூடிய ஏவுகணைகளை இந்தியா முதற் தடவையாக அனுப்பி வைக்கவுள்ளது.

எனினும் முற்றிலும் சமாதான நோக்கங்களுக்காகவே இந்த விண்வெளித் திட்டம் மேற்கொள்ளப்படும் என இந்தியா தெரிவித்துள்ளது.

இந்திய விண்வெளி ஆணைக்குழுவின் தலைவர் ராமச்சந்திர ராவ் இது பற்றி தெரிவிக்கையில் இச் சக்திவாய்ந்த ஏவுகணை இம்மாதம் 20 ஆம் திகதிக்கும் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதிக்குமிடையே கால நிலையைப் பொறுத்து அனுப்பிவைக்கப்படும் என்று தெரிவித்தார். (ஒ)

நாட்டு நெருக்கடிக்கு காரணம் என்ன?

சிறிமா கூறும் விளக்கம்

கொழும்பு, மார்ச் 19 ஜெயவர்த்தன அரசு உண்மையான அணிசேரா கொள்கையைக் கடைப்பிடிக்காததே இன்றைய நாட்டுநெருக்கடிக்குக் காரணமாகும்.

அமரர் பண்டாரநாயக்காவின் 88 ஆவது பிறந்ததினக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா இப்படிக் கூறினார்.

கூட்டம் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

திருமதி பண்டாரநாயக்கா மேலும் கூறியதாவது:-

இன்றைய இனப்பிரச்சினைக்கு காரணம் என்ன?

தமிழரின் காணிகளை சிங்களவருக்கு வழங்கிய டி. எஸ். சேனநாயகாவின் குடியேற்றக் கொள்கைதான் என்று சிலர் கூறுகின்றனர்.

அமரர்கள் டி. எஸ். சேனநாயக, டட்லிசேனநாயக, சேர் ஜோன் கொத்தலாவலை ஆகியோரின் கொள்கைகளுடன் இன்றைய அரசாங்கத்தின் கொள்கைகளை ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்பு ஒன்றை இன்றைய இளைஞர்களுக்கு நாம் அளிக்க வேண்டும்.

அமரர் பண்டாரநாயக்காவுக்கு முன்னர் தானே தனிச் சிங்கள மொழிக் கொள்கையை அமுல் நடத்த முயற்சித்ததாகக் கூறி திரு ஜெயவர்த்தன பெயரெடுக்க முதலில் முயற்சித்தார்.

பண்டாரநாயக்காவின் சிங்கள மொழிக் கொள்கைச் சட்டம் தான் இன்று இனப்பிரச்சினை மோசமடையக் காரணம் என்று திரு. ஜெயவர்த்தன இப்போது கூறுகிறார்.

- இப்படி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சொன்னார். (உ-எ)

தமிழ்மொழி வளர்ச்சிக்கு புதிய துறைகளை சார்ந்த நூல்கள்தேவை

பாராட்டு விழாவில் உரை

கொழும்பு, மார்ச் 19 தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு புதிய துறைகளைச் சேர்ந்த நூல்கள் பல தேவைப்படுகின்றன. இதை திரு நடராஜாவின் நூலும் ஓரளவு ஈடு செய்கின்றது.

"எனது நோக்கில் இலங்கைப் பாராளுமன்றம்" என்னும் நூலின் ஆசிரியர் திரு. செல்லப்பா நடராஜாவுக்கு அளிக்கப்பட்ட பாராட்டு வைபவத்தில் தலைமை வகித்து உரையாற்றிய இலங்கை சட்டக்கல்லூரி தமிழ் மன்றத் தலைவர் திரு மா. நல்லரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை சட்டக்கல்லூரியின் தமிழ் மன்றத்தினால் நடத்தப்பட்ட இந்த பாராட்டு விழாவில் அவர் மேலும் பேசுகையில்,

சட்டக் கல்லூரி மாணவர்களுக்கும் பயனுள்ள வகையில் இந்நூல் அமைந்துள்ளது. எனவே இந்நூலாசிரியரை பாராட்ட வேண்டியது நமது கடமை.

இவரது நூல் தமிழ் மொழியில் புதியதொரு துறையாகும். நாடாளுமன்ற நடைமுறைகளை இந்நூல் விவரிப்பதுடன் அரசியல் சார்ந்த சிறந்த கட்டுரை இலக்கியமாகவும் விளங்குகிறது என்றும் குறிப்பிட்டார்.

நூலின் ஆசிரியர் தமது உரையில் மனித உரிமைகளைக் காப்பதற்காகப் போராடி அண்மையில் மறைந்த சட்டமேதை திரு எஸ். நடேசன் கியூ ஸி போன்றவர்களின் முன்மாதிரியை சட்டக்கல்லூரி மாணவர்கள் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தமிழ் மன்ற உபதலைவர் செல்வி மலர்விழி பாலசுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்தினார். உப செயலாளர் திரு. க. சண்முகலிங்கம் நன்றியுரை கூறினார். (இ-7)

பொய்யாமொழி

குறள்:

செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்.

பொருள்:

செவிக்குக் [illegible] லாத போது ([illegible] ஒப்புமாறு) வயிற்றுக்கும் சிறிது உணவு தரப்படும்.

சட்டவிரோத மின்பாவனை ஒழிக்கப்படும்

அச்சுவேலி, மார்ச் 19 சட்டவிரோத மின்பாவனையை இல்லாமல் செய்வதற்கு யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் அச்சுவேலி உப அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

'சட்டவிரோத மின்பாவனையாளர்களுக்கு' என்ற தலைப்புடன் சிவப்பு நிற துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. (இ-11)

சாரணர்களுக்கு செயல் திட்டம்

வட்டுக்கோட்டை, மார்ச் 19 இலங்கை சாரணர் சங்கம் சாரணர்களுக்கான புதிய இளைஞர் செயல் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இப்புதிய திட்டப்படி இளைஞர்கள் தலைமைத்துவப் பண்பை ஏற்று நற்பிரசையாகத் திகழ வழிகாட்டப்படுகிறது

இப் புதிய செயற்திட்டத்தை காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, பருத்தித்துறை ஆகிய சாரண மாவட்டங்களுக்கு அமுல்படுத்த காங்கேசன்துறை மாவட்ட ஆணையாளர் திரு நா. போஜன் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-161)

மந்திரியை வரவேற்க தவறிய அதிபர் மீது ஒழுங்கு விசாரணை!

கொழும்பு, மார்ச் 19 பாடசாலைக் கட்டடம் ஒன்றைத் திறக்க வந்த மாவட்ட அமைச்சரை உரிய முறைப்படி வரவேற்கவில்லை என்ற காரணத்துக்காக அந்தப் பாடசாலை அதிபர் ஒழுங்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சம்பந்தப்பட்ட மாவட்ட அமைச்சரின் முறைப்பாட்டைத் தொடர்ந்து, இந்த ஒழுங்கு விசாரணை நடைபெறுகின்றது.

இதனிடையில் சம்பந்தப்பட்ட மாவட்ட அமைச்சர் நடந்து கொண்ட விதம் குறித்து பூரண விசாரணை ஒன்று நடத்தும்படி குறிப்பிட்ட பாடசாலை அதிபரும் கல்வி அமைச்சின் செயலாளரைக் கேட்டுள்ளார்-

மேற்கு மாகாணமாவட்டம் ஒன்றில் உள்ள பாடசாலை ஒன்றில் இச்சம்பவம் இடம் பெற்றது.

அப்பாடசாலை அதிபர் தனது முறைப்பாட்டில் கூறியிருப்பதாவது:-

புதிதாகக் கட்டப்பட்ட இரண்டு வகுப்பு அறைகளையும் அலுவலகத்தையும் முதலாம் வகுப்பு மாணவன் ஒருவனைக் கொண்டு நான் திறக்க வைத்தேன்.

இதன் பின்னர் ஒரு வாரம் கழித்து நான் பிரிவுக் கல்வி அதிகாரி அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டேன் திறக்கப்பட்ட கட்டடங்களை மாவட்ட அமைச்சரைக் கொண்டு மீண்டும் திறக்கும் படி கல்வி அதிகாரிகள் என்னைப் பணித்தனர்.

"கட்டடம் ஏற்கனவே திறக்கப்பட்டாயிற்று. மீண்டும் திறப்புவிழா நடத்துவது அநியாய வேலை; பொன்னான நேரத்தை மண்ணாக்கக் கூடாது"- என்று கல்வி அதிகாரிக்குத் தெரிவித்தேன்.

எப்படியும் மாவட்ட அமைச்சரைச் சந்தோஷப் படுத்த வேண்டும் என்பதில்தான் அதிகாரிகளின்நாட்டம் இருந்தது. திறக்கப்படாத நிலையில் இருந்த அலுவலகக் கட்டடத்தை மாவட்ட அமைச்சரைக் கொண்டு திறப்பிக்க நான் திட்டமிட்டேன்.

அதன் படி வந்த மாவட்ட அமைச்சரை வயதில் குறைந்த மாணவன் மூலம் வெற்றிலை கொடுத்து வரவேற்றேன்.

வெற்றிலையை வாங்கிய அமைச்சர் அதை நிலத்தில் தூக்கி எறிந்தார் எல்லாரும் அதிர்ச்சியடைந்தோம். ஆசிரியர், மாணவரை வெளியில் அணி வகுத்து நிற்கச் செய்து தன்னை வரவேற்கவில்லை என்பதினாலேயே மாவட்ட அமைச்சருக்குக் கோபம் வந்திருக்க வேண்டும்.

"ஒரு தலைவரை எப்படி வரவேற்க வேண்டும் என்பது தெரியவில்லையா?" என்று என்னை ஆத்திரத்துடன் கேட்டார்.

எனது காரணங்களை அவர் கேட்காமல் அவர் என்னைப் பயமுறுத்தினார்—

—இப்படி சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர் தனது முறைப்பாட்டில் தெரிவித்து இருக்கிறார். (உ-எ)

சிறுவர் பூங்கா

பருத்தித்துறை மார்ச்19 மந்திகையிலுள்ள உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அருகாமையிலுள்ள அரசகாணியில் சிறுவர் பூங்கா ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல்லை பருத்தித்துறை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க ஆயுதப் பொறுப்பாளர் ராசீக் அண்மையில் நட்டார்.

Niru Tuition Centre
KONDAVIL

A/L 89
கலை, வர்த்தக விஞ்ஞானம்
வகுப்புக்கள்
(தனித்துவம் மிக்க ஆசிரியர்கள்)

ஆரம்பம்: 21 - 3 - 87
காலை 7-00 மணி

உதயன்

19 - 03 - 1987 வியாழக்கிழமை

நிரு டியூசன் சென்ரர்
கோண்டாவில்.
O/L DAY CLASS பிரிவு 2
(பகல் முழு நேரம்)
காலை 8-00 முதல் 1-30 வரை
(முற்றிலும் பாடசாலை வசதி போன்றவை)
ஆரம்பம் 23 - 03 - 87.

16 உபமின் நிலையங்கள்

எரிந்து போகும் ஆபத்து

ஒத்துழைப்புக் கேட்கிறார் ஆணையாளர்

யாழ்ப்பாணம் மார்ச் 19

யாழ் மாநகரசபை எல்லைக்குள் உள்ள உப மின் நிலையங்களில் பதினாறு எந்த நேரத்திலும் பழுதடைந்தோ, எரிந்தோ போகக் கூடிய நிலையில் இருப்பதால் மின் பாவனையைக் கட்டுப்படுத்தும் படி பாவனையாளர்களுக்கு யாழ் மாநகர ஆணையாளர் திரு சி. வி. கே. சிவஞானம் அவசர வேண்டுகோள் விடுத்து இருக்கிறார்.

இது சம்பந்தமாக ஆணையாளர் விடுத்த அறிக்கை வருமாறு:

தற்பொழுது மாநகராட்சி மன்றத்தினால் வழங்கப்படும் மின்சாரம் 27 உபமின் நிலையங்களிலிருந்து வழங்கப்படுகின்றன.

அவற்றிலுள்ள 16 உபமின் நிலையங்களிலுள்ள மின் மாற்றிகள் அதிக மின் சுமையை எடுப்பதனால் எந்த நேரத்திலும் எரிந்தோ, பழுதடைந்தோ போகக்கூடிய நிலை உருவாகியுள்ளது.

அப்படியான பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் புதிய மின்மாற்றிகள் பொருத்தப்படும் வரையும் சம்பந்தப் பட்ட பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கும் நடவடிக்கை பாரதூரமாக பாதிக்கப்படலாம்.

இந்நிலையில் எல்லா பாவனையாளர்களும் எம்முடன் ஒத்துழைக்கும் பட்சத்தில் நகரில் பல்வேறு பகுதியில் மின்சார தடைகள், உபமின் நிலைய பாதிப்புகள் ஆகியவை ஏற்படாமல் தடுக்கலாம்.

1 மாலை 5-00 மணி முதல் இரவு 10-30 மணி வரை ஒட்டு வேலைத்தளங்கள், அரிவு வேலைத்தளங்கள், அரைக்கும் ஆலைகள் ஆகியவை செயற்படக்கூடாது.

2 வீட்டுப் பாவனையாளர்கள், மாலை 6-00 மணி முதல் இரவு 10-00 மணிவரை கூடிய பாவனைகள் எடுக்கக் கூடிய மின் அடுப்பு, நீர் இறைக்கும் இயந்திரங்கள் போன்ற உபகரணங்களை பாவிக்காமலும் அத்தியாவசியமாகத் தேவைப்படும் விளக்குகளை மட்டும் எரிப்பதன் மூலமும் உயர் தாக்கத்தைக் குறைக்கலாம்

முதலாவது விடயத்தில் குறிப்பிடப்பட்டவர்கள் இந்த வேண்டுகோளுக்கு செவிசாய்க்கத் தவறும் பட்சத்தில் எந்தவித அறிவித்தலும் இன்றி அவர்களது மின்விநியோகம் துண்டிக்கப்படும்

இரண்டாவது விடயத்தில் போதிய ஒத்துழைப்புக் கிடைக்காத பட்சத்தில் சுமை கூடியுள்ள உபமின் நிலையங்கள் உள்ள பகுதிகளில் மாலை 6-00 மணிமுதல் இரவு 10-00 மணி வரை பகுதிபகுதியாக மின் தடை ஏற்படுத்தவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படலாம். இவற்றைத் தவிர்ப்பதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பையும் நாம் வேண்டிநிற்கிறோம்.

கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 19

1987 தொழில் நுட்பக் கல்வி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் காங்கேசன் துறை பிரிவுக்கான கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யூனியன் கல்லூரியில் நடைபெறும். (இ-எ)

★ வெளிவந்து விட்டான்

அர்ச்சுனு

மார்ச் மாத இதழ் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

கிரிக்கெட் பிரியர்களுக்கோர் இனிப்பான செய்தி!

பாடசாலை கிரிக்கெட் வீரர் தெரிவுக்கான கூப்பன்கள் இரண்டு அர்ச்சுனுவில் வெளிவந்துள்ளன.

இன்னும்
★ துணுக்குக் குவியல்
★ அறிவுலக அறிமுகம்
★ சிறுகதை ★ கவிதை
★ கட்டுரைகள்
★ எண் சிலம்பம்
★ கணிதப் புதிர்
போன்ற பல அம்சங்களுடன்
சாரணீயசி சிறப்பு மலராக
வெளிவந்துள்ளது.

★ ★ ★

இன்றே உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

தனிப்பிரதி ரூபா 3/- மட்டுமே.



வடக்கின் மிகப் பிரபல்யமான
பாடசாலை கிரிக்கெட் வீரர் தெரிவு
உதயன் நிறுவனத்தின் ஆதரவோடு
யாழ் ஜொலிஸ்ரார்ஸ் ஜியன்ஸ்
விளையாட்டுக் கழகங்கள் இணைந்து நடத்தும்
மிகப் பிரபல்யமான கிரிக்கெட் வீரரை வாசகர்கள் தெரிவு செய்யும் போட்டி
1987

வீரரின் பெயர் ____________
கல்லூரி ____________

வாக்காளர் பெயர் ____________
விலாசம் ____________
ஒப்பம் ____________

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 19 - 03 - 1987 தொலைபேசி இல. 24805, 23078

Printed and Published by Uthayan Publications (Private) Ltd.
15, Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office. Under Number QJ / 94 /N /87. Telephone. 24805, 23078

ராஜீவுடன் பேசுவதில் பலனில்லை

இராணுவத்திற்கு பூரண அதிகாரம் கோருகிறார் அநுரா

கொழும்பு, மார்ச் 19

ராஜீவ் காந்தியுடன் பேசுவதில் பலனில்லை; தீவிரவாதிகளை அழித்து ஒழிக்க இராணுவத்துக்கு பூரண அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா கொழும்பில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

"தீவிரவாதப் பிரச்சினை யுத்தத்தினால் தான் தீர்க்க முடியும்; சமாதானப் பேச்சுகளினால் தீர்க்க முடியாது" — என்றும் திரு. பண்டாரநாயக்கா சொன்னார். (உ-எ)

ஷெல் தாக்குதலுக்குக் காரணமான

சந்தேக நபர்களை விசாரிக்கமுடியாதநிலை

நீதிவான் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ் நகரில் கடந்த ஏழாம் திகதி ஷெல் தாக்குதல்களினால் இறந்த பதின்மூன்று பேரினது மரணங்களும் கொலைகள் எனத் தீர்ப்பளிக்கிறேன். இக் கொலைகளுக்குக் காரணமான சந்தேக நபர்களை தற்போதைய சூழ்நிலையில் விசாரணை செய்யவோ கைது செய்யவோ முடியாதிருப்பது வேதனைக்குரியதாகும்.

— மேற்படி சம்பவத்தில் உயிரிழந்தோரின் மரண விசாரணை தொடர்பான தீர்ப்பில் யாழ் நீதிவான் கனகசபை கதிரவேற்பிள்ளை இப்படித் தெரிவித்திருக்கிறார்.

தீர்ப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ் கோட்டை இராணுவ ஷெல் நகரின் பல பாகங்களிலும் விழுந்து, 13 பேருடைய மரணங்களையும் வேறு பலருடைய மரணத்தையும், பலருக்குப் படுகாயத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

வெகுசனத் தொடர்பு சாதனங்கள் பொய்களைக் கூறுவதாலும், உண்மைகளை மறைப்பதாலும், அப்பாவி மக்கள் அநியாயமாகப் படுகொலை செய்யப்படுகிறார்கள். இது கொலைகாரர்களுக்கு உற்சாகத்தை ஊட்டுவதாகவும் இது அமைகிறது. இது வேதனைக்குரியது.

இக்கொலைகள் தொடர்பான சந்தேக நபர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு பொலிஸாருக்குக் கட்டளையிடுகிறேன். (உ-10)

தனிப்பட்டோரின் பரீட்சை முடிவுகள் இன்று கிடைக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 19

கடந்த டிசம்பரில் ஜி. சி. ஈ. சாதாரணதர பரீட்சை எடுத்த தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்குரிய பரீட்சை முடிவுகள் இன்று வியாழன் மாலை வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வந்து சேரும்.

பரீட்சை முடிவுகளை நாளை வெள்ளிக்கிழமை காலை 8 30 மணி முதல் மாலை 4 மணி வரை யாழ் கல்வித்திணைக்களத்திற்கு சென்று பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது

அப்படிச் செல்லும் போது அடையாளக் கார்ட்டுகளையும் கொண்டு செல்லும்படி தனிப்பட்ட பரீட்சார்த்திகள் கோரப்பட்டுள்ளனர்

நாளை வெள்ளிக்கிழமை கல்வித் திணைக்களத்துக்குச் சென்று பரீட்சை முடிவுகளை எடுக்கத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு அவை சனிக்கிழமை தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது

(உ-எ)

அரசு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களைத் தீர்மானித்து செயல்படுத்தும் பொறுப்பை பிரதமர் காந்தி தானே ஏற்றிருப்பதாக பிரபல அரசியல் விமர்சகர் ஜி கே ரெட்டி 'இந்து'வில் எழுதியிருக்கிறார்.

திரு. காந்தி தனது அதிகாரங்களை மத்தியஸ்தர்களிடம் பாரப்படுத்தவில்லை. கொள்கை வகுக்கும் பணியில் தற்சமயம் மத்திறஸ்தர்கள் ஈடுபடுவதில்லை.

—இப்படி திரு ரெட்டி 'இந்து'வில் மேலும் எழுதியிருக்கிறார். (உ-எ)

இலங்கை மீது---

(1ஆம் பக்க தொடர்ச்சி)

தற்காக யாழ்ப்பாணம் போக அனுமதி கோரிய சமயம் கைது செய்யப்பட்டார் அப்போது காலின் கீழ் அவர் சுடப்பட்டார். இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு தாக்கப்பட்டார். பின்னர் மட்டக்களப்பு அதிரடிப் படை முகாமில் அடைத்து வைக்கப்பட்டார்.

✶ 1985இன் கடைசி 4 மாதங்களில் 66 பொது மக்கள் படையினரால் கொல்லப்பட்டனர்.

✶ 1986இல் முதல் மூன்று மாதங்களில் 77 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த ஆண்டு முற்பகுதியில் மட்டக்களப்பில் கண்ணிவெடித் தாக்குதலில் 13 கொமாண்டோக்கள் பலியானார்கள். அதைத் தொடர்ந்து 150 பொது மக்கள் படையினரால் கொல்லப்பட்டனர்.

✶ இலங்கைப் பாதுகாப்புப் படையினரின் கைகளில் அகப்படும் பல பொது மக்கள் 'காணாமற்'போகின்றனர்.

✶ சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் இலங்கைக்குச் சென்று இராணுவ முகாம்கள், தடுப்புக் காவல் முகாம்களைப் பார்வையிட அனுமதி வழங்கப்படவேண்டும்.

இந்திய---

(1ஆம் பக்க தொடர்ச்சி)

உறுப்பினர்கள் இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் தொடர்ந்து இம்சைப்படுத்தப்பட்டு கொலை செய்யப்படுவதை தொடர்ந்து பார்த்துக் கொண்டு இந்தியா வெறுமனே இருக்கக் கூடாது; உடனே செயலில் இறங்க வேண்டும் என வற்புறுத்தினர். (உ-எ)

கூப்பன்...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

உதவி அரச அதிபர் பிரிவு, உடுவில் உதவி அரச அதிபர் பிரிவின் ஒரு பகுதி, சங்கானை உதவி அரச அதிபர் பிரிவின் ஒரு பகுதி ஆகியவற்றைக் கொண்டு உள்ளது.

✶ பலாலி இராணுவ முகாம்:

பலாலியில் இருந்து வயாவிளான், புன்னாலைக் கட்டுவன், உரும்பிராய் வீதிக்குக் கிழக்குப் பக்கமாக வசிப்பவர்கள்-

உரும்பிராயில் இருந்து கோப்பாய் பாலம் வரையுள்ள வீதியில் வடக்குப்பக்கமாக வசிப்பவர்கள், கரவெட்டி, பருத்தித்துறை உதவி அரச அதிபர்கள் பிரிவுகளில் வசிப்பவர்கள்.

மேற் கூறப்பட்ட பகுதிகள் கோப்பாய் தெல்லிப்பழை, உடுவில் உதவி அரச அதிபர் பிரிவுகளின் பகுதிகளைக் கொண்டுள்ளன.

✶ யாழ் கோட்டை இராணுவ முகாம்:

மாதகல் துறையில் இருந்து பண்டத்தரிப்பு சண்டிலிப்பாய் வீதிக்கு மேற்குப் பக்கமாக வசிப்பவர்கள், சண்டிலிப்பாயிலிருந்து மானிப்பாய் வீதிக்கு தென் மேற்குப் பக்கமாக வசிப்பவர்கள்-

மானிப்பாயில் இருந்து உடுவில், மருதனாமடம், உரும்பராய், கோப்பாய் பால வீதிக்குத் தெற்குப் பக்கமாக வசிப்பவர்கள்-

சாவகச் சேரி, ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவுகளில் வசிப்பவர்கள்.

மேற் கூறப்பட்ட இப்பகுதி யாழ், நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட சகலருக்கும் கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவின் ஒருபகுதி, சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவின் ஒரு பகுதி, சங்கானை உதவி அரச அதிபர் பிரிவின் ஒருபகுதி ஆகியவற்றைக் கொண்டது. (உ-எ)

நாவற்குழியில் போராளி வீரமரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

நாவற்குழி இராணுவத்தினர் வெளியேற முற்பட்ட பொழுது அவர்களை எதிர்த்துப் போராடிய விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் வீர மரணம் அடைந்தார்.

இரண்டாவது லெப்ரினன்டான குரு நகரைச் சேர்ந்த கேதீஸ் (ஜீவா) என்பவரே வீர மரணமடைந்தவராவார்.

செவ்வாய்க்கிழமை இச்சம்பவம் நடந்தது.

இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்து அறிக்கை விடுத்திருக்கின்றனர். (உ-10)

* * *

கடந்த திங்களன்று அக்கரைப்பற்று கிராமத்தை சுற்றி வளைக்க முயன்ற அதிரடிப் படையினருடன் நேரடி மோதலில் ஈடுபட்ட விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி தேவராஜா (ரவி) வீர மரணமடைந்தார்.

விடுதலைப் புலிகள் இவருக்கு தமது வீர வணக்கத்தைத் தெரிவித்து அறிக்கை விடுத்திருக்கின்றனர். (உ-10)

இலங்கைக்கு..

(1 ம் பக்கத்தொடர்ச்சி)

இராணுவம் நுழைய வேண்டும்.

தேர்தல் நடந்து சரியான தலைவர்கள் தெரிவாகி, அரசாங்கத்தைப் பொறுப்பு ஏற்கும்வரை சில ஆண்டுகளுக்கு இந்திய இராணுவம் அங்கு இருக்க வேண்டும். -இப்படி டாக்டர் சுப்பிரமணிய சுவாமி சொன்னார். (உ-எ)

மண்எண்..

(1ஆம் பக்க தொடர்ச்சி)

ருள் விநியோக டிப்போவிலிருந்து மண்எண்ணெயை வாங்கி, யாழ் மாவட்டத்திற்குக் கொண்டுவந்து விநியோகிக்கலாம். மண்எண்ணெயின் விற்பனை விலை ஒரு லீற்றர் ரூபா 8 ஆக (போத்தல் ஒன்று ரூபா 6-40 ஆக) இருத்தல் வேண்டும்.

தெல்லிப்பழை, சுன்னாகம், புங்குடுதீவு, ஊர்காவற்றுறை, சங்கானை, அச்சுவேலி, பருத்தித்துறை, கட்டைவேலி/நெல்லியடி, உடுப்பிட்டி, சாவகச்சேரி, நீர்வேலி, மல்லாகம் / அளவெட்டி, மானிப்பாய், பண்டத்தரிப்பு, நல்லூர் ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் தனியார் முகவர்கள் மூவருக்குமே மண்எண்ணெய் விநியோகிக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. (உ)

செய்திச் சாரம்

ஜீ. சி. ஈ. பரீட்சை முடிவில் ஹாட்லி சாதனை

பருத்தித்துறை, மார்ச் 19

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 95 சதவீதமான மாணவர்கள் ஜீ சி ஈ உயர்தர வகுப்புப் பயில்வதற்குத் தகுதி பெற்றுள்ளார்கள்.

1986ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜீ. சி ஈ சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் வடமராட்சிப் பகுதியில் ஹாட்லிக்கல்லூரி முதன்மை பெற்றுத்திகழ்கிறது.

இப்பரீட்சையில் செல்வன் கே. சிவநேசன், செல்வன் கே. ஆனந்தகுமார் ஆகிய இரு மாணவர்கள் எட்டுப் பாடங்களிலும் விசேஷ சித்தி பெற்றுள்ளனர். பதினொரு மாணவர்கள் ஏழு விசேஷ சித்திகளையும் ஒரு திறமைச் சித்தியையும், ஒன்பது மாணவர்கள் ஆறு விசேஷ சித்திகளையும் இரண்டு திறமைச் சித்திகளையும் பெற்றனர். (இ-118)

கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

நல்லூர் சிவஞானப் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேக விழா இன்று காலை 10 மணி முதல் 11.31 மணிவரை நடைபெறும். (இ-10)

ஐ. நா. அறிக்கை ஏற்கப்பட்டது

வாஷிங்டன், மார்ச் 19

இலங்கை அரசுப்படைகளின் மனித உரிமை மீறல்கள் பற்றி அண்மையில் சர்வதேச மன்னிப்புச் சபை சமர்ப்பித்த அறிக்கை, அமெரிக்க காங்கிரஸின் தஸ்தாவேஜுகளில் ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை 32 பக்கங்களைக் கொண்டது.

இன்று பரிசளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ் பல்கலைக்கழக விளையாட்டுச்சபை நடத்திய "லீக்" முறையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் பரிசளிப்பு விழா இன்று நடைபெறும்.

இன்றைய விழாவிக்கு யாழ் பல்கலைக்கழகத்தின் பொருளாதார பீடத் தலைவர் கலாநிதி வி. நித்தியானந்தனும் அவரது பாரியார் திருமதி டாக்டர் நித்தியானந்தனும் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்வர்.

யாழ் பல்கலைக்கழகத்தின் கூடைப் பந்தாட்டத் தளத்தில் மாலை 5-30 மணிக்கு ஆரம்பமாகும் இவ் விழாவின் போது கண்காட்சி கூடைப்பந்தாட்ட போட்டிகள் இரண்டு நடைபெற விருக்கின்றன. (உ-7)

நாளை சைக்கிள் ஊர்வலம்

யாழ்ப்பாணம் மார்ச் 19

தமிழ் மக்கள் மீது ஸ்ரீலங்கா அரசு நடத்தி வரும் இனப் படுகொலைகளையும் மனித உரிமை மீறல்களையும் எரிபொருள், பொருளாதார கட்டுப்பாடுகளையும் வன்மையாகக் கண்டித்து சைக்கிள் ஊர்வலம் ஒன்று நாளை நடைபெற உள்ளது.

மனித உரிமைக்கான வெகுஜன இயக்கம் ஏனைய பொது ஸ்தாபனங்களுடன் இணைந்து இந்த ஊர்வலத்தை நடத்துகிறது.

சுன்னாகம் மயிலணியில் இருந்து காலை 9 மணிக்கு ஊர்வலம் ஆரம்பமாகும்.

ஊர்வலம் சுன்னாகம் சந்தரோடை, உடுவில், இணுவில், மருதனாமடம் ஊடாக உடுவில் உதவி அரசாங்க அதிபர் பணிமனையை அடையும்.

பின்னர் பணிமனையில் பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெறும்.

அனைத்துப் பொது மக்களையும் ஊர்வலத்தில் பங்குபற்றுமாறு மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் கேட்டுள்ளது. (இ-10)

விக்னு டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[O/L வகுப்புகளுக்கு
தனித்துவம் வாய்ந்த
ஒரே ஒரு நிறுவனம்]
— 10 வருட சேவை —

ஆரம்பம்: 19-03-1987

பிரிவு - 4
OL DAY CLASSES 8-30 - 1-30
EVENING CLASSES 2-45 - 4-45

9-ம், 8-ம், 7-ம், 6-ம், 5-ம்
வகுப்புகளும் ஆரம்பமாகின்றன

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்குழு:
★ கணிதம்:- திரு. தயாபரன்
★ ஆங்கிலம்:- திரு. விஸ்வநாதன்
★ விஞ்ஞானம்:- திரு. சூரி
★ தமிழ், சமயம்:- திரு திருப்பதி
★ சமூகக்கல்வி, வர்த்தகம்:- திரு. கருணாகரன்

மு. குறிப்பு:- I. கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே ஒரு நிறுவனம்.

II. பெறுபேறுகள் குறைந்திருப்பின் கவலைப்பட வேண்டாம். எமது நிறுவனம் நிச்சயம் இதற்குக் கைகொடுக்கும்.